பெருநகர சென்னை மாநகராட்சி

செய்தி வெளியீடு

செ.வெ.எண். 683 **நாள்: 16.11.2026**

மணலி மண்டலத்தில், 1,30,000 மரக்கன்றுகள் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதன் ஒரு பகுதியாக மணலி மண்டலம், வார்டு-22க்குட்பட்ட , ஃபியூச்சுரா லேஅவுட் பகுதியில், நடைபெற்று வரும் மரக்கன்றுகள் நடும் பணிகளை இணை ஆணையாளர் (பணிகள்) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப., அவர்கள், நேரில் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் பசுமைப் பரப்பை அதிகரிக்கும் வகையில் 12 இலட்சம் மரக்கன்றுகள் நடுவதற்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, மாநகராட்சியின் 1 முதல் 15 மண்டலங்களில் உள்ள அனைத்து பகுதிகளிலும் மரக்கன்றுகள் நடும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி, மணலி மண்டலத்தில், 1,30,000 மரக்கன்றுகள் நடவு செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதன் ஒரு பகுதியாக மணலி மண்டலம், வார்டு-22க்குட்பட்ட, ஃபியூச்சுரா லேஅவுட் பகுதியில், நடைபெற்று வரும் மரக்கன்றுகள் நடும் பணிகளை இணை ஆணையாளர் (பணிகள்) திருமதி க.கற்பகம், இ.ஆ.ப., அவர்கள் இன்று (16.11.2026) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இத்திட்டத்தின் கீழ் இதுவரை 28,276 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன.

இந்நிகழ்வின்போது, பசுமைப் பரப்பை அதிகரித்தல், சுற்றுச்சூழலைப் பாதுகாத்தல் மற்றும் தூய்மையான, ஆரோக்கியமான சூழலை உருவாக்குதல் ஆகியவற்றின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. மேலும், நடவு செய்யப்பட்ட மரக்கன்றுகள் நல்ல முறையில் வளர்ந்து உயிர்ப்புடன் இருப்பதை உறுதி செய்ய, அவற்றை முறையாகப் பராமரித்தல் மற்றும் தொடர்ந்து கண்காணித்தல் அவசியம் என இணை ஆணையர் அவர்கள் வலியுறுத்தினார்.

மேலும், நிர்ணயிக்கப்பட்டுள்ள 1,30,000 மரக்கன்றுகள் நடும் இலக்கினை எட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளவும், ஏற்கனவே நடவு செய்யப்பட்டுள்ள மரக்கன்றுகளை முறையாகப் பராமரிக்கவும் சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்வின்போது, மண்டல அலுவலர், செயற்பொறியாளர்கள், கல்வி அலுவலர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,

பெருநகர சென்னை மாநகராட்சி.